# உள்நாட்டு வாசனைச் சரக்குகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் "இலவங்கப்பட்டை - உலகிற்கு"என்ற மாபெரும் தேசிய முனைப்பினை NDB ஆரம்பிப்பு

உள்நாட்டு ஏற்றுமதிப்பயிர்களை ஒன்றிணைத்து, அவற்றினை ஊக்குவிக்கும் தமது தொடர்ச்சியான நடவடிக்கையின் மற்றுமொரு கட்டமாக, இலங்கையிலுள்ள இலவங்கப்பட்டை எனப்படும் கறுவா பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களையும், கறுவா தொடர்பான தயாரிப்புகளை உற்பத்தி செய்வோர் ஆகியோரையும் வலுவூட்டும் நோக்கில் **"இலவங்கப்பட்டை – உலகத்திற்கு"** என்ற மாபெரும் தேசிய முனைப்பினை, இலங்கையில் கறுவா ஏற்றுமதியை மேலும் தூண்டி, அதனை விஸ்தரிக்கும் நோக்குடன் NDB முதன்மையாக முன்னெடுத்துள்ளது.

குறித்த இந்த முனைப்பானது 2014 ஜனவரி 27ம் திகதி திங்கட்கிழமை, இடம்பெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்ட கௌரவ. அமைச்சர்கள் பசில் ராஜபக்ஸ (பொருளாதார மேம்பாட்டு அமைச்சரவை அமைச்சர்) மற்றும் ரெஜினோல்ட் கூரே (சிறு ஏற்றுமதிப் பயிர் ஊக்குவிப்பு அமைச்சர் ஆகியோரால் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. அந்நிகழ்வில் இலங்கை கறுவாப்பட்டை பற்றிய விபரங்களை அளிக்கும் ***'www.cinnamontotheworld.com'*** என்ற இணையத்தள தகவல் மையம் கௌரவ. அமைச்சர் பசில் ராஜபக்ஸ அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. '**இலங்கை இலவங்கப்பட்டை**' தொடர்பிலான உள்ளாந்த விபரத்தொகுப்பினை கொண்டுள்ள இந்தத் தளம், உலகத்தின் எந்த மூலையிலிருந்தும், இலங்கை கறுவா குறித்த விபரங்களை பெற விழைவோருக்கு இலகுவான அணுக்கத்தை அளிக்கும். இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கை வாசனைப் பொருட்கள் கவுன்சில் மற்றும் சிலோன் சேம்பர் ஒ∴ப் கொமர்ஸ் ஆகியன இந்த முனைப்பிற்கான வினைத்திறன்மிகு பங்காளர்களாக விளங்குகின்றன. NDB இன் **"இலவங்கப்பட்டை – உலகத்திற்கு"** என்ற முனைப்பிற்கான கருத்தாக்க பங்காளர்களான லியோ பேர்ணெற், அங்குராப்பண நிகழ்வுக்கான நிகழ்வு முகாமையாளர்களாகவும் செயற்படும் அதேவேளை, இணையத்தள மூலோபாய முனைப்புகள் சமூக ஊடக பங்காளர்களான 230interactive இனால் மேற்கொள்ளப்படுகின்றது

NDB இன் **"இலவங்கப்பட்டை – உலகத்திற்கு"** என்ற முனைப்பானது, '**இலங்கை இலவங்கப்பட்டை**'யை நாட்டின் தனித்துவமிக்க அடையாளமாக்குவதோடு, சர்வதேச வர்த்தக நாமம் என்ற அங்கீகாரத்தை பெற உதவுவதற்காக, இத்தொழிற்துறையின் பங்குடமையோடு முன்னெடுக்கும் வகையில் நீண்ட கால மூலோபாயத்துடன் மேற்கொள்ளப்பட்ட முனைப்பாகும். அந்தவகையில், இத்தொழிற்துறையுடன் NDB கொண்டுள்ள தொடர்பானது, அடித்தளத்திலுள்ள வீட்டுத்தோட்டத்தில் சிறியளவு பயிர்ச்செய்கை மேற்கொள்பவர்கள் முதல் பாரியளவு ஏற்றுமதியாளர்கள் வரை என பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுறவானது, நிதியளித்தலுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், அவர்களுக்கு அதிகாரமளித்து, வலுவூட்டும் ஆதவுக் கட்டமைப்பு ஒன்றையும் உள்ளடக்கும். இதனூடாக துரித வளர்ச்சிக்கு உகந்த சூழல் உருவாக்கப்படடும் என வங்கி நம்புகின்றது

இந்த முனைப்பு குறித்த NDB இன் நோக்கம் பற்றி தனது கருத்துகளை பகிர்ந்துகொண்ட NDB பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ராஜேந்திரா தியாகராஜா அவர்கள் "தேசிய அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் வங்கி என்ற வகையில், NDB ஆனது தேசிய பொருளாதாரத்தில் முக்கிய

அங்கம் வகிக்கும் ஏற்றுமதித் துறை குறித்து தொடர்ச்சியாக சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றது. வங்கியானது இதுகாறும் தேயிலை, கைத்தறி மற்றும் முகமூடி தயாரித்தல் போன்ற தேர்வு செய்யப்பட்ட தொழிற்துறைகளுக்கு தமது ஆதரவை அளித்து வந்துள்ளது. கறுவா தொழிற்துறைக்கு ஆதரவளிப்பதான இந்த நீண்ட கால முயற்சியானது, நாட்டின் சாத்தியமான ஏற்றுமதி மூலவளங்களை மேம்படுத்துவதுடன், இலங்கையின் அசல் உற்பத்திகளுக்கு சர்வதேச தராதரமிக்க வர்த்தக நாம அங்கீகாரத்தை பெற்றுக்கொடுத்தல் ஆகிய எமது திடசங்கற்பத்தினை தொடர்ந்து முன்னெடுப்போம் என்ற விசுவாசத்தினையே வெளிப்படுத்துகின்றது"

"**"இலவங்கப்பட்டை – உலகத்திற்கு**" என்ற முனைப்பின் ஊடாக, இந்த தொழிற்துறையின் வளர்ச்சிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வசதிகளை அளித்து துணைபுரிய எண்ணியுள்ளோம். நிதியுதவியாளர் என்ற வகையில் நிச்சயம் தனது பங்களிப்பினை நல்கவுள்ள NDB ஆனது அத்துடன், அடித்தளத்திலுள்ள வீட்டுத் தோட்டங்களில் கறுவா வளர்ப்போருக்கு ஆதரவளிப்பதுடன், கறுவா தொடர்பான தயாரிப்புகளை உற்பத்தி செய்வோரை மேமம்படுத்தவும், சிறிய மற்றும் நடுத்தர அளவு ஏற்றுமதியாளர்களுக்கு வலுவூட்டும் வகையிலும் தமது நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்தும். அத்துடன், தொழிற்துறை தொடர்புகளை ஏற்படுத்தி வழங்கும் NDB, அதனூடாக அறிவாற்றலை பகிர்ந்து கொள்ளவும், இத்தொழிற்துறையிலுள்ள சிறியளவு பங்குதாரர்களை மேம்படுத்தவும் எண்ணியுள்ளதுடன், அதிதீவிர சர்வதேச வர்த்தக நாம ஊக்குவிப்புத்திட்டம் மற்றும் கூடுதலான வெளிப்படுத்தல்களை மேற்கொள்தல் ஆகிய நடவடிக்கைகள் மூலம், இலங்கை இலவங்கப்பட்டைக்கான சர்வதேச சந்தை அணுக்கத்தை பெற்றுக்கொடுக்கவும் திட்டமிட்டுள்ளது" என தியாகராஜா அவர்கள் மேலும் குறிப்பிட்டார்

இந்த தொழிற்துறைக்கான நீண்ட கால இலக்கினை மையமாகக் கொண்டு, "இலவங்கம் வளர்ப்போம்" என்ற நிகழ்ச்சித்திட்டம், நுண்நிதியியல் வசதிகளை ஊக்குவிப்பதன் ஊடாக வீட்டுத்தோட்ட மட்டத்தில் கறுவா உற்பத்தி செய்பவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளும் வகையில் உடனிகழ்வாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது, அண்மையில் மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது, குறித்த பிரதேசத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட எண்பதுக்கும் மேற்பட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு நுண்நிதி வசதிகளை அளித்தலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சலுகை வட்டி வீதங்களுடன் அளிக்கப்படும் இந்த நுண்கடன் வசதி திட்டமானது, இத்தொழிற்துறையில் காலூன்றியுள்ள சிறிய அளவு பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் என நம்பப்படுகின்றது.

கறுவா தொழிற்துறையில் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்ற ஒருமித்த தேசிய மனப்பாங்கினைக் கட்டியெழுப்புத் நோக்குடன், NDB, சிலோன் சேம்பர் ஒ∴ப் கொமர்ஸ் (CCC), காலி சேம்பர் ஒ∴ப் கொமர்ஸ், ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கை வாசனைப் பொருட்கள் கவுன்சில் ஆகியவற்றுடன் கரம்கோர்த்து, இத்துறையில் செயற்படும் சிறிய மற்றும் நடுத்தர பங்குடமையாளர்களை மேம்படுத்தும் இலக்குடன் அவர்களின் நலன் கருதி அறிவாற்றல் கருத்து மன்றங்களையும் உருவாக்க எண்ணியுள்ளது. இவ்வாறான முனைப்புகள் கறுவா தொழிற்துறை சார் தொடர்புகளை வலுப்படுத்தும் எனவும், நீண்ட கால நோக்கில், இத்துறையின் மேம்பாட்டுக்கு இவை காரணிகளாக அமையும் எனவும் நம்பப்படுகின்றது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபை, சிலோன் சேம்பர் ஒ∴ப் கொமர்ஸ் மற்றும் இலங்கை வாசனைப் பொருட்கள் கவுன்சில் ஆகியவற்றின் பங்குடமையுடன் கறுவா கைத்தொழிற்துறையுடன் தொடர்புடைய

பல்வேறு வினைத்திறன் மிகு முனைப்புகளை முன்னெடுக்கவும் NDB தீர்மானித்துள்ளது. அனுசரணை மூலோபாய ஊக்குவிப்பு நிகழ்வுகள், இலங்கை கறுவா'வினை ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு கண்காட்சிகளில் காட்சிப்படுத்துதல், குறித்த தொழிற்துறையின் அடிமட்ட பிரிவினரை வலுப்படுத்தும் நோக்குடன் திறன் கட்டமைப்பு நிகழ்வுகழளை நடாத்துதல் போன்றவை ஊடாக இலங்கை கறுவா'வுக்கு ஊக்குவிப்பு அளிப்பதானது, இந்த வருடம் வங்கியின் நிகழ்ச்சி நிரலில் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

"இன்று இலங்கை இலவங்கம் அல்லது உண்மையான இலவங்கம் என்பது, உலகளாவிய ரீதியில் விற்பனை செய்யப்படும் மிகச்சிறந்த இலவங்கப்பட்டையாகக் கருதப்படுனிள்ளது. 2012ம் ஆண்டு, கறுவா தொழிற்துறையானது ஏறத்தாள 12,630 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருவாயைக் கொண்டுவந்துள்ளதுடன், 2020ம் ஆண்டளவில் ஏனைய வாசனைப் பொருட்கள் மற்றும் உப உணவுப்பொருட்களுடன் இணைந்து, வெளிநாட்டு நாணயப்பரிமாற்ற வருவாயாக 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை நாட்டுக்கு ஈட்டிக்கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நவீனமயப்படுத்துதல், தொழனுட்ப உதவியை அளித்தல், நிபுணத்துவ அனுபவத்தை பகிர்ந்துகொள்தல், புத்தமைவு செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் இலங்கை இலவங்கப்பட்டையின் முழுமையான தரத்தினை மேம்படுத்தல் போன்றவற்றினூடாக இத்தொழிற்துறையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச்செல்ல முடியும் என நாம் நம்புகின்றோம். கிராமப்புற தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம், உலகளாவிய ரீதியில், இலங்கையின் வர்த்தக நாம படிமத்தை மேலும் மேம்படுத்த முடியும் என்பதுடன், அதிகரித்த ஏற்றுமதி வருமானத்தைக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்த்தமுடியும் என்பது நிதர்சனம். அதனாலேயே NDB இன் **"இலவங்கப்பட்டை – உலகத்திற்கு"** என்ற முனைப்பானது, இத்தொழிற்துறைக்கான எமது உறுதிப்பாட்டை மாத்திரமல்லாமல், தேசிய பொருளாதாரத்திற்கான எமது பங்களிப்பையும் வெளிப்படுத்துகின்றது" என திரு. தியாகராஜா அவர்கள் மேலும் குறிப்பிட்டார்

-முடிவு-

**<u>ஆசிரியர்களுக்கான குறிப்பு:</u>**

இலவங்கம் அல்லது கறுவா (Cynnamomum Zeylanicum Blume) என்பது இலங்கையின் மிகப்பழமை மிகுந்ததும், குறிப்பிடத்தகுந்ததுமான வாசனைப்பொருளாகும். பண்டைய அரபு இராச்சியத்தில் கறுவாப்பட்டையானது, அழகுசாதனப்பொருளாகவும், மருந்துத் தயாரிப்பிற்கான மூலப்பொருளாகவும் உபயோகிக்கப்பட்டது. பண்டைய நாட்களில் முதலில் அராபிய நாட்டவர்களும் ஐரோப்பியர்களும் கறுவா வர்த்தகத்தில் ஏகபோக உரித்தினைக் கொண்டிருந்தனர். இதன்காரணமாக, இலங்கைக்கும் ஏனைய உலக நாடுகளுக்கிடையிலும் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டது. உலக வரலாற்றில் இலவங்கம் முக்கிய இடத்தினைக் கொண்டிருந்தது என்றால் மிகையில்லை. 15ம் நூற்றாண்டுக் காலகட்டத்தில் கறுவா கிடைக்கும் இடங்களைத் தேடும் காரணியே பல புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதற்கு காரணமான கப்பற்பயணங்களுக்கு வழிவகுத்தது. பாரம்பரியமாக கறுவா எனப்படுவது, கறுவா மரத்திலிருந்து உரித்து எடுக்கப்பட்டு சுருள்களாக்கப்படும் (quill வடிவில்) பட்டையினையே குறிக்கின்றது. அசல் இலவங்கம் தவிர ஏனைய ஜாதி கறுவா வகைகள், பாரியளவில் பல்வேறு நாடுகளில் பயிரிடப்படுகின்றன. ஆயினும் காலங்காலமாக, தூய கறுவா உற்பத்தியானது, இயற்கையான முறையில் பேணி வளர்க்கப்பட்டு இலங்கையில் மட்டுமே கிடைக்கின்றது. இலங்கையில்

மட்டுமே, அசல் கவரும் நறுமணம், தனித்துவமிக்க ருசி மற்றும் மருத்துவப்பெறுமானம் மிகுந்த தூய சிலோன் இலவங்கப்பட்டையை பெறமுடியும். அதனடிப்படையில், இலங்கையானது, இயற்கை இலவங்கப்பட்டை உற்பத்தியில், ஏனைய உற்பத்தியாளர்களை விட அதிக சர்வதேசச் சந்தையில் அதிக அனுகூலத்தை கொண்டிருப்பது தெளிவாகின்றது.

இந்த வாசனைப் பொருளின் பயிர்ச்செய்கையானது, நீர்கொழும்பு முதல் கொழும்பு வரையான கரையோரப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ளதுடன், தென்பகுதியில் ஹம்பாந்தோட்டை வரை பரந்து வியாபித்துள்ளது.

<u>ஏற்றுமதிச் சந்தை மற்றும் எதிர்காலம்:</u>

இலங்கை கறுவாவின் மொத்த உற்பத்தியில் 65% ஆன பங்கு முழு கறுவாயாக விளங்கும் அதே நேரம் பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா உற்பத்திப் பொருட்களான வெட்டப்பட்ட கறுவா, கறுவா எண்ணெய், oleoresins எனப்படும் செறிவாக்கப்பட்ட திரவவடிவம், தூள் மற்றும் மாத்திரை உள்ளிட்ட வடிவங்களில் 35% கறுவா மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. முழு வடிவத்தில், ஏறத்தாள 12 விதமான உற்பத்திப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றுள் கறுவா மற்றும் கறுவா மர மலர்கள், வெட்டப்பட்ட கறுவா சுருள்கள் (1 கிலோகிராமுக்கு குறைவான சில்லறை விற்பனைப் பொதியில்), cinnamon featherings எனப்படும் உட்புற பட்டைகள், கறுவா வில்லைகள், தூளாக்கப்பட்ட கறுவா மற்றும் மாவாக்கப்பட்ட கறுவா ஆகியன உள்ளடங்கும்

*<u>கறுவாவின் சில பயன்கள்:</u>*

- பெரும்பாலும் கறுவா சமையலிலும், பேக் செய்யப்படும் உணவு வகைகளிலும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. சலட்கள், இனிப்புத் தின்பண்டங்கள், பானங்கள், சூப்கள், கறிவகை மற்றும் சோஸ்களிலும் இவை சேர்க்கப்படலாம்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களான கறுவா நறுமணமூட்டப்பட்ட தேநீர் பொன்றன தற்போது பிரபல்யமாகி வரும் அதேவேளை, சில நாடுகளில் கறுவாப்பட்டையை கொதிக்கும் நீரில் சேர்த்து அவித்தும் பருகப்படுகின்றது
- ஆயுர்வேத மருந்துத் தயாரிப்பில், பொதுவானதும், முக்கிய மூலப்பொருள்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.
- உணவுப்பதார்த்தங்களின் ருசியை கூட்ட கறுவா உபயோகிக்கப்படுகின்றது
- நறுமணத்திரவிய தொழிற்துறையிலும், மருந்துத் தயாரிப்பு தொழிற்துறையிலும் மூலப்பொருளாக உபயோகிக்கப்படுகின்றது